# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2236 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கவனிக்க.- 2021.07.02 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஅ) - இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

திருத்தம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**காணி அமைச்சு**

*காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தில் நிறைவேற்று சேவை தொகுதியில் திணைக்களத்துடனான III ஆவது தரத்தின் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) பதவிக்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை - 2018 (2021) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியை நீடித்தல்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2021, மே மாதம் 07 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோருகின்ற இறுதித் திகதி 2021, யூலை மாதம் 15 ஆந் திகதி வரை நீடிப்பதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

செயலாளர்,<br>
காணி அமைச்சு.

காணி அமைச்சு,<br>
"மிகிகத்த மெதுர",<br>
1200/6 ராஜமல்வத்த வீதி,<br>
பத்தரமுல்லை.

07-61

---

**சுகாதார அமைச்சு**

*அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021*

1.0 அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021, ஒற்றோபர் மாதம் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதற்கான விண்ணப்பம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk என இணையத்தளத்தில் "Our services" என்பதன் கீழுள்ள "Online Application - Recruitment Exams" என்பதில் வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்கள் இணைய வழியில் (Online) மாத்திரம் சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பம் இணைய வழியினூடாக அனுப்பப்பட்டதும் அது பதிவிறக்கம் செய்யப்பட்டு, அதன் அச்சுப் பிரதியின் தொடர்புடைய பிரிவுகள் கையெழுத்தினால் நிரப்பப்பட்டு, விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டு, ஏற்புடையதாயின் நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்துகையுடன் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரியை அடையக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். (விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை தங்களுடன் வைத்திருத்தல் பயனுடையதாகும்). கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.08.03 ஆகும். இப்பரீட்சை 2021, ஒற்றோபர் மாதம் நடத்தப்படும். பரீட்சை நடத்தப்படும் இடங்கள் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். (பரீட்சை, அட்டவணை - II இல் குறிப்பிடப்பட்ட நகரங்களில் அமைந்துள்ள பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடைபெறும். பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் நகரம் அட்டவணையின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்டு தெரிவு செய்யப்படும் நகரம் மற்றும் அந்த நகரத்துக்குரிய இலக்கம் அட்டவணை - II இற்கமைய சரியாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

***குறிப்பு*** .- விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டியது கட்டாயமானதாகும். அத்துடன் அது தபாலில் காணாமல் போய்விட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்ற முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. இறுதி நாள் வரை விண்ணப்பப் படிவத்தை தாமதப்படுத்துவதால் ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

2.0 (அ) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை அடிப்படையில் தகைமை பெற்றுள்ள பரீட்சார்த்திகள், மாவட்ட மக்கள் தொகையின் விகிதாசார அடிப்படையில் அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த பதவிக்கு நியமிக்கும் போது, தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் தேர்ந்தெடுக்கப்படுவர். இப் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அனைத்து பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர். அவரது தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகளுக்கான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஆ) தேர்ந்தெடுக்கப்படுவோர் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்குவரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். மேலும், வெற்றிடங்கள் ஒரு சிலவற்றை அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்பாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3.0 **மொழி மூலம்** .- இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தமது விருப்பின் பிரகாரம் இதில் யாதேனுமொரு மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

4.0 **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நிபந்தனைகள்** .-

(i) அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்துகின்ற பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் இலக்கம் 2053/18 மற்றும் 2018.01.09 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அச்சேவைப் பிரமாணக் குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட மற்றும் இதன் பின்னர் கொண்டுவரப்படுகின்ற திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கும், இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், கட்டுப்படும் விதத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பரீட்சார்த்திகள் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

(ii) இந்த நியமனமானது 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 வருடங்களுக்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அது சேவையில் நிரந்தரமாக்குவதற்கான நிபந்தனையாகும்.

(iii) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கேற்ப, இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்படுவார்கள்.

(iv) இந்நியமனம் வழங்கப்படுகின்ற அலுவலகத்தில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்கள் கட்டாயமாக பணியாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்ற யாதேனுமொரு விசேட காரணத்தின் மீது அக்காலம் முடிவடைவதற்கு முன்னர் எவரேனுமொரு உத்தியோகத்தரை இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்படின் நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு.

(v) அரசகரும மொழி – அரசகரும மொழியல்லாத மொழியில் சேவைக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு முன்னர் ஒரு அரசகரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இரண்டாவது அரசகரும மொழி – நியமனம் செய்யப்பட்டு மூன்று (03) வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் பொது நிருவாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதற்கு விளைவாந்தன்மையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டாம் அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(vi) அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களின் சாதாரண கடமை நேரம் வருடத்தின் அனைத்து நாட்களிலும் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 வரையாகும். எனினும், கடமை தேவையின் நிமித்தம் மற்றும் கடமையின் தன்மைக்கேற்ப மேற்படி நேரத்தில் மாற்றம் ஏற்படலாம். மேலும் இரவு நேரக் கடமையில் ஈடுபட வேண்டியமை கட்டாயமானதுடன், கடமையின் தன்மைக்கேற்ப மேலதிக கடமையில் ஈடுபடுத்துவதற்கும் உத்தரவிடப்படலாம்.அவ்வாறே வருடத்தின் முந்நூற்றி அறுபத்தி ஐந்து (365) நாட்களிலும் கடமையாற்றுவதற்கு உட்படுகின்றார்.

(vii) சுகாதார அமைச்சின் செயலாளரினால் நிர்ணயிக்கின்ற கடமைகளை நிறைவேற்றுகின்ற இந்த உத்தியோகத்தர்களினால் ரூபா 5000.00 பெறுமதியான பிணை தொகையொன்றினை வைப்புச் செய்தல் வேண்டும்.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2021, யூலை மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூலை மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**<br>
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,<br>
கொழும்பு 8,<br>
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.<br>
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(viii) சேவையின் தேவை நிமித்தம் சுகாதார நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளில் பணிபுரியும் அலுவலர்கள் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் பணியாற்றுமாறு உத்தரவிடப்படலாம். அதற்குப் பதிலாக மேலதிக நேரக் கொடுப்பனவு அல்லது விடுமுறைக்கால கொடுப்பனவு அல்லது பதில் விடுமுறை என்பவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

5.0 **சம்பளம்** .- இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதியுடைய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III, II மற்றும் I ஆம் தரங்களுக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 28,940 – 10 ×300 – 11 × 350 – 10 × 560 – 10 × 660 – ரூபா 47,990 ஆகக் காணப்படும். அச்சம்பள அளவுத் திட்டமானது2020.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும். சம்பளக் குறியீடு MN-02-2016 ஆகக் காணப்படுவதுடன்,மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமனம் அமுலுக்குவரும் தினத்திலிருந்து சம்பளம் வழங்கப்படும். ரூபா 31,940.00 சம்பள படிநிலையைத் தாண்டிச் செல்வதற்காக தரம் II இற்கான பதவி உயர்வினையும், ரூ.35,790.00 சம்பள படிமுறையைத் தாண்டிச் செல்வதற்காக தரம் I இற்கான பதவி உயர்வினையும், பெற்றுக் கொள்ளல் வேண்டும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற பிற கொடுப்பனவுகளும் உங்களுக்கு உரித்துடையதாகும்.

6.0 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்கின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும். மேலும் விதவைகள் மற்றும் அனாதைகள் / தபுதாரர்கள் அனாதைகள் ஓய்வூதிய சம்பளத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும். இதற்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற முறைக்கேற்ப அதற்கான பங்களிப்புத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும்.

7.0. இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

7.1. **அடிப்படைத் தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்கின்ற இறுதி தினத்தன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதன்படி 2003.08.03 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னரும் 1991.08.03 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு பின்னரும் பிறந்த பரீட்சார்த்திகள் மாத்திரம் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும்.)

(இ) சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கிய நிலையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7.2. **கல்வித் தகைமைகள் :**

(1) கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரணத் தரப்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரு தடவையில் ஆறு (06) பாடங்களில சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(2) கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் (சாதாரண பொதுவினாத்தாள் மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். பழைய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

**கவனிக்க** : சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் 2021.08.03 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

8.0 **மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் தேர்ந்தெடுத்தல் :**

(அ) மாவட்ட பெயர் அட்டவணையானது அட்டவணை 1 என குறிப்பிடப்பட்டுள்ளது. வெற்றிடத்திற்காக போட்டியிடுவதற்கு தெரிவு செய்யும் மாவட்டம் மற்றும் அதன் இலக்கத்தை அட்டவணை 1 இன் பிரகாரம் விண்ணப்பப் படிவத்தில் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தலானது கண்டிப்பாக பிரதிநிதித்துவ அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் சனத்தொகையின் விகிதாசாரத் திற்கேற்ப அந்தந்த மாவட்டங்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கையில் உரிய தொகை ஒதுக்கப்படும். யாதேனுமொரு மாவட்டத்தில் நிரப்ப வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போட்டியிடுவதற்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகைமை பெறுவர்.

(i) யாதேனுமொரு மாவட்டத்திற்கு மேலே குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை அந்த மாவட்டத்திற்காக விண்ணப்பித்து தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களில் இருந்து நிரப்ப முடியாத சந்தர்ப்பங்களில் அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கையை அண்மித்த அனைத்து மாவட்டங்களுக்கு இடையிலும் அந்தந்த மாவட்டத்தின் சனத்தொகை விகிசாரத்திற்கு ஏற்ப மீண்டும் பகிர்ந்தளிக்கப்படும்.

(ii) நிரப்பப்படவுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை சிறியளவாயின், அதன் காரணமாக மாவட்ட சனத்தொகை விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொள்ள முடியாது போகின்றபோது திறமையின் ஒழுங்கு முறைக்கேற்பத் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(iii) பரீட்சையில் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் தொகையானது நிலவும் வெற்றிடங்களை விடவும் குறைவாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது மாவட்ட சனத் தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவுகள் இடம்பெற மாட்டாது.

(இ) மாவட்டத்திற்கு தகுதி பெறுவதற்கு இருக்க வேண்டிய தகைமைகள்.- மாவட்டம் ஒன்றின் வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கு பின்வரும் விடயங்களில் ஒன்றேனும் இருத்தல் வேண்டும்.

i. விண்ணப்பதாரர் அந்த மாவட்டத்தில் பிறந்த ஒருவராக இருத்தல் வேண்டும்.

அல்லது,

ii. பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதி தினத்திற்கு முந்திய ஐந்து (05) வருடங்களினுள் அவர் அந்த மாவட்டத்தில் மூன்று (03) வருடங்களாவது தொடர்ச்சியாக வசித்து வந்த ஒருவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

iii. அவர் தொடர்ச்சியாக ஐந்து (05) வருடங்கள் அந்த மாவட்டத்தில் தமது இரண்டாம் நிலைக் கல்வியை பெற்றிருத்தல் வேண்டும்.

***குறிப்பு.***- எவரேனுமொரு விண்ணப்பதாரரின் தந்தை அல்லது தாய் அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றிலே இடமாற்றம் செய்யப்படக்கூடியசேவை ஒன்றில் பணியாற்றும் பட்சத்தில், அந்த விண்ணப்பதாரிக்கு தமது தாய் அல்லது தந்தை பிறந்த இடத்தை தமது மாவட்டமாக தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும். (அதற்காக விண்ணப்பதாரரினால் தமது பெற்றோரின் பிறந்த இடம் மற்றும் அவர்கள் அரசாங்க சேவையில் பணியாற்றுவதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள் என்பவற்றினை நேர்முகப் பரீட்சையின் போது அல்லது கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பித்தல் வேண்டும்.)

எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின் போது அல்லது கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான பின்வரும் ஆவணங்களை தேவையானவாறு சமர்ப்பிப்பதற்கு கடமைப்பட்டுள்ளார்.

(i) பிறப்புச் சான்றிதழ்

(ii) பிரதேசச் செயலாளரினால் இணைக் கையொப்பம் இடப்பட்ட கிராம சேவை உத்தியோகத்தரின் சான்றிதழ் அல்லது 03 வருடங்களுக்குரிய தொடர்ச்சியாக வசிப்பதற்கான பதிவினை உறுதிப்படுத்துவதற்கான வாக்காளர் இடாப்பு.

(iii) பாடசாலை விடுகை சான்றிதழ்

(iv) எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்குரிய வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. தாம் மிகவும் விருப்பமான மாவட்டம் எது என்பதனை விண்ணப்பத்தில் குறிப்பிட்டதன் பின்னர் அதனை மாற்ற முடியாது.

9.0 **பரீட்சை நடைமுறை.-**

(அ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரர் ஒருவர் தமக்குரிய ஒரு மொழியைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பரீட்சைக்குரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் அம்மொழியிலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது.

| | | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| (I) | மொழித் தேர்ச்சி | 100 | 2½ மணித்தியாலம் |
| (II) | உளச்சார்பு | 100 | 1 மணித்தியாலம் |

**மொழித் தேர்ச்சி**.- இவ்வினாத்தாள் பரீட்சார்த்திகளின் கருத்துத் தெரிவித்தல், கிரகித்தல், எழுத்து வடிவம், மொழி மற்றும் கட்டுரை,கடமை சார்ந்த கடிதம் ஒன்றினை எழுதுதல்,எண் வடிவ அட்டவணையை தயாரித்தல்,தரப்பட்டுள்ள விடயத்தை சுருக்கி எழுதுதல், தரப்பட்டுள்ள பல வாக்கியங்கள் அடங்கிய கருத்தினை தனி வாக்கியத்தில் வெளிப்படுத்துதல், மற்றும் இலகுவான இலக்கண மொழிநடை பற்றிய அறிவு என்பன தொடர்பான அறிவினை பரீட்சிப்பதற்கானவிடயம் தொடர்பான வினாக்களைக்கொண்டிருக்கும்.

**உளச்சார்பு**.- இவ்வினாத்தாள் பரீட்சார்த்திகளின் எண் கணித திறமை, தர்க்க ஆற்றல், பொது அறிவு என்பவற்றினை அளவிடும் வகையில் தயாரிக்கப்படுகின்ற விடயம் தொடர்பான வினாக்களைக் கொண்டிருக்கும்.

***குறிப்பு.***-

(அ) அலுவலகப் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பரீட்சார்த்திகளின் தகைமைகள் மற்றும் திறமைகள் என்பவற்றினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாத்தாள்கள் தயாரிக்கப்படும்.

(ஆ) அனைத்து எழுத்து மூல வினாத்தாள்கள் தொடர்பாகவும் தெளிவற்ற கையெழுத்துக்கள் மற்றும் சொற்களின் எழுத்துப் பிழைகள் என்பன தொடர்பாக புள்ளிகள் குறைக்கப்படும்.

(இ) இப்பரீட்சையானது போட்டிப் பரீட்சை ஒன்றாகக் காணப்படுகின்ற போதிலும், நியமனம் பெறுவதற்கான தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒதுக்கியுள்ள புள்ளிகளில் ஒவ்வொரு வினாத்தாளிலும் நூற்றுக்கு நாற்பது (40%) புள்ளிகளையேனும் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அத்துடன் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் 50% இனை பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஆட்சேர்ப்புச் செய்கின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையினை பூர்த்தி செய்யக்கூடியவாறு பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் ஒழுங்கு முறையினைக் கண்டிப்பாகப் பின்பற்றி நியமனங்கள் வழங்கப்படும்.

(ஈ) **பரீட்சைப் பெறுபேறுகள்**.- விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் www.results.exams.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் ஊடாக வெளியிடப்படும்.

10.0 **போலியான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம், யாதேனுமொரு விண்ணப்பதாரர் தகைமையற்றவர் என தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் பட்சத்தில் அல்லது பரீட்சை முடிவடைந்ததன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது தகுதியாளர் நிலையினை இரத்துச்செய்ய முடியும். விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பித்த தகவல்களில் ஒன்று எச்சந்தர்ப்பத்திலாவதுபோலியானதென கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் எச்சந்தர்ப்பத்திலும் அவரை அரசாங்க சேவையிலிருந்து விலக்குவதற்கு முடியும்.

11.0 **பரீட்சைக் கட்டணம்** .-

(அ) பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணங்களை செலுத்தும்போது இணைய வழி முறைமையிலிருந்து வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணங்களைச் செலுத்தும் செயன்முறையின் கீழ் மாத்திரம் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் வேண்டும்.

1. எந்தவொரு வங்கி கடன் அட்டை ஒன்றின் மூலம் (Any Bank Credit Card)
2. இணைய வழியிலான கட்டண கொடுப்பனவு வசதிகள் செயற்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு வங்கி பற்று அட்டை ஒன்றின் மூலம் (Any bank debit Card with internet transaction facilities)
3. இலங்கை வங்கி இணையவழி வங்கி முறைமை (Bank of Ceylon Online Banking System )
4. எந்தவொரு இலங்கை வங்கி கிளை ஒன்றின் மூலம் (Bank of Ceylon Slip Payments)
5. தபால் திணைக்களத்தின் எந்தவொரு தபால் அலுவலகம் ஒன்றின் மூலம் (Postal Department Payment at any Post Office)

***குறிப்பு.***- மேற்குறிப்பிட்ட முறைகள் மூலம் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டிய முறை பற்றிய அறிவுறுத் தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் (Technical Instruction ) கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைத்தது என்பது பற்றி குறுஞ் செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்துக்கான முழுத்தொகையும் செலுத்தப்படுத்துதல் வேண்டும். பரீட்சைக்கட்டணம் குறைவாக அல்லது அதிகமாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படுகின்ற பிழைகள் தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ/வேறு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது.

12.0 **விண்ணப்பித்தல் மற்றும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய ஒழுங்கு முறை** : இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கிலத்தில் மாத்திரம் நிரப்பப்படல் வேண்டும்.விண்ணப்பதாரர் இணையவழியில் அனுப்பிய மென்பிரதி (soft copy) மற்றும் பதிவுத் தபாலில் அனுப்பிய அச்சுப்பிரதி (Printed copy) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைத்ததும், மென்பிரதியும் அச்சுப் பிரதியும் சரிபார்க்கப்பட்டு செல்லுபடியான விண்ணப்பப் படிவம் என திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது முறைமையில் (system) பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E -mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பபடிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவித்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படுகின்ற எந்த திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கருதப்படமாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப் படிவங்கள் அறிவிக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

***கவனிக்க*** :

I. பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாதேனுமொரு நகரத்திற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின்

எண்ணிக்கை போதிய அளவில் இல்லாத போது இரண்டாம் விருப்பம் தெரிவித்த நகரத்திற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், அந்த இரண்டாம் நகரத்திற்கும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை போதிய அளவில் இல்லாத போது அண்மித்த நகருக்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். பரீட்சை நடாத்துகின்ற நகரம் பற்றிய இறுதித் தீர்மானம்பரீட்சை ஆணையாளர் நாயகத்தியால் மேற்கொள்ளப்படும்.

II. தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள முழுப் பெயருக்கு மாத்திரமே நியமனக்கடிதம் வழங்கப்படுவதனால் பெயரை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். நியமனம் வழங்குகின்ற சந்தர்ப்பத்தில் பெயரில் மாற்றம் செய்வதற்கு அல்லது யாதேனுமொரு பகுதியினை சேர்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

III. பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை இந்த அறிவித்தலின் 13(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலையை உடைய ஒருவரின் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

IV. வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் தங்களுடைய விண்ணப்பங்களை அனுப்பியுள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய தினத்தன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தினை அனுப்பியுள்ள அனைவருக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படல் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகைமை பெற்றுள்ளமைக்கான தகைமையாகக் கொள்ளப்படாது. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரர்களின் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், அதன் போது தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லையென தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்த நிலை நிராகரிக்கப்படும்.

13.0 **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரம் அனுப்பி வைத்தவுடன் அது பற்றி குறிப்பிட்டு பரீட்சை திணைக்களத்தினால் அறிவித்தல் ஒன்று செய்திப் பத்திரிகையில் அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களின் பின்னரும் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாவிடின் அது பற்றி பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) அதன் போது உங்களிடம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதியையும், பதிவுத் தபால் பற்றுச்சீட்டினையும் வைத்துக் கொண்டு பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றினைக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்திடம் வினவுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரர் ஒருவராயின் பெக்ஸ் மூலம் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உங்களது பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு அத்துடன் மேலே உங்களது விபரம் அடங்கிய கோரிக்கைக் கடிதமொன்றை பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பெக்ஸ் இலக்கத்திற்கு பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்து விசாரித்தல் மிகவும் பயனுடையதாக அமையும்.

(இ) பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும். யாதேனுமொரு நிறுவனம் ஒன்றின் ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒருவர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவரின் மூலமும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/ ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர்,தமது பிரிவின் கிராம சேவை அலுவலர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்திய ஆணையாளர் ஒருவர்,சட்டத்தரணி ஒருவர், உத்தரவாதம் பெற்ற நொத்தாரிசு ஒருவர்,முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர்,அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தரமாக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பௌத்த விஹாரை ஒன்றின் விஹாராதிபதி அல்லது தலைமை பிக்கு ஒருவர் அல்லது ஏனைய மதத்தைச் சேர்ந்த வணக்கஸ்தலம் ஒன்றிற்குப் பொறுப்பான அல்லது மதத் தலைவர்களில் குறிப்பிடத்தக்க பதவி வகிக்கும் ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தமக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் சந்தர்ப்பத்திலேயே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி கிடைக்கப்பெற மாட்டாது.

14.0 விண்ணப்பதாரர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை.
(ii) செல்லுபடியான கடவுச் சீட்டு
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்

பரீட்சார்த்திகள் அவர்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதன் பொருட்டு அவர்களது முகம் மற்றும் காதுகளை மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு மறுப்பு தெரிவிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது தொடக்கம் அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சார்த்தியை அடையாளம் காணும் வகையில் மேற்பார்வையாளருக்கு காணக்கூடியதாக முகத்தையும் காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்தினுள் இருத்தல் வேண்டும்.

15.0 விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் ஒன்றினை வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கருதக் கூடாது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகளுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். அந்த ஒழுங்கு விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும்.

16.0 இங்கு குறிப்பிடப்படாத வேறு யாதேனுமொரு விடயம் தொடர்பாக, சுகாதார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

17.0 இந்த சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில ஊடக அறிவித்தல்களுக்கிடையே யாதேனுமொரு வேறுபாடு இருப்பின், அதன் போது சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வைத்தியர் எஸ். எச். முனசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
இலக்கம் 385, வண பத்தேகம விமலவன்ஷ தேரர் மாவத்தை,
கொழும்பு 10.
2021, யூன் மாதம் 29 ஆந் திகதி.

**அட்டவணை - I**

**மாவட்டங்களின் பெயர் பட்டியல் மற்றும் இலக்கங்கள்**

| | | |
|---|---|---|
| 01. | கொழும்பு | 01 |
| 02. | கம்பஹா | 02 |
| 03. | களுத்துறை | 03 |
| 04. | கண்டி | 04 |
| 05. | மாத்தளை | 05 |
| 06. | நுவரெலியா | 06 |
| 07. | காலி | 07 |
| 08. | மாத்தறை | 08 |
| 09. | அம்பாந்தோட்டை | 09 |
| 10. | யாழ்ப்பாணம் | 10 |
| 11. | மன்னார் | 11 |
| 12. | வவுனியா | 12 |
| 13. | முல்லைத்தீவு | 13 |
| 14. | கிளிநொச்சி | 14 |
| 15. | மட்டக்களப்பு | 15 |
| 16. | அம்பாறை | 16 |
| 17. | திருகோணமலை | 17 |
| 18. | குருநாகல் | 18 |
| 19. | புத்தளம் | 19 |
| 20. | அநுராதபுரம் | 20 |
| 21. | பொலன்னறுவை | 21 |
| 22. | பதுளை | 22 |
| 23. | மொனராகலை | 23 |
| 24. | இரத்தினபுரி | 24 |
| 25. | கேகாலை | 25 |

**அட்டவணை - II**

**பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள்**

| | மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| 01. | கொழும்பு | கொட்டஹேனா | 01 |
| | | மருதானை | 02 |
| | | பொரளை | 03 |
| | | குருந்துவத்தை | 04 |
| | | பம்பலப்பிட்டி | 05 |
| | | ஹெவ்லொக் டவுன் | 06 |
| | | நுகேகொட | 07 |
| | | மொரட்டுவ | 08 |
| | | பிலியந்தல | 09 |
| | | மஹரகரம | 10 |
| | | ஹங்வெல்ல | 11 |
| | | அவிசாவளை | 12 |
| | | ஹோமாகம | 13 |
| 02. | கம்பஹா | நீர்கொழும்பு | 14 |
| | | மினுவாங்கொட | 15 |
| | | திவுலப்பிட்டி | 16 |
| | | வேயாங்கொட | 17 |
| | | கம்பஹா | 18 |
| | | ஜா - எல | 19 |
| | | வத்தளை | 20 |
| | | களணி | 21 |
| | | தொம்பே | 22 |
| 03. | களுத்துறை | ஹொரனை | 23 |
| | | பாணந்துறை | 24 |
| | | களுத்துறை | 25 |
| | | மத்துகம | 26 |
| | | அளுத்கம | 27 |
| 04. | கண்டி | கண்டி | 28 |
| | | கட்டுகஸ்தொட்ட | 29 |
| | | தெல்தெனிய | 30 |
| | | வத்தேகம | 31 |
| | | நுகவெல | 32 |
| | | கலகெதர | 33 |
| | | கம்பொல | 34 |
| 05. | மாத்தளை | மாத்தளை | 35 |
| | | கலேவல | 36 |
| | | நாவுல | 37 |
| | | லக்கல - பள்ளேகம | 38 |
| 06. | நுவரெலியா | ஹெதுனுவெவ | 39 |
| | | நுவரெலியா | 40 |
| | | வத்துமுல்ல | 41 |
| | | ஹட்டன் | 42 |
| | | கினிகத்ஹேன | 43 |
| 07. | காலி | அம்பலாங்கொட | 44 |
| | | காலி | 45 |
| | | பத்தேகம | 46 |
| 08. | மாத்தறை | வெலிகம | 47 |
| | | மாத்தறை | 48 |
| | | கம்புறுபிட்டி | 49 |
| | | ஹக்மன | 50 |
| | | தெய்யந்தர | 51 |
| | | திக்வெல்ல | 52 |
| | | அக்குரஸ்ஸ | 53 |
| | | கொட்டபொல | 54 |
| 09. | அம்பாந்தோட்டை | பெலியத்த | 55 |
| | | வலஸ்முல்ல | 56 |
| | | வீரகெட்டிய | 57 |
| | | தங்கல்ல | 58 |
| | | அம்பலாந்தோட்டை | 59 |
| | | அம்பாந்தோட்டை | 60 |
| | | திஸ்ஸமகாராம | 61 |
| 10. | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | 62 |
| | | யாழ்ப்பாணம் | 63 |
| | | தெல்லிப்பளை | 64 |
| | | பருத்தித்துறை | 65 |

| | மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| 11. | மன்னார் | மன்னார் | 66 |
| | | முருங்கன் | 67 |
| 12. | வவுனியா | வவுனியா | 68 |
| 13. | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | 69 |
| 14. | கிளிநொச்சி | கிளிநொச்சி | 70 |
| | | பளை | 71 |
| 15. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 72 |
| | | ஏறாவூர் | 73 |
| | | காத்தான்குடி | 74 |
| 16. | அம்பாறை | அம்பாறை | 75 |
| | | சேரங்கட | 76 |
| | | கல்முனை | 77 |
| | | அக்கரைப்பற்று | 78 |
| | | சம்மாந்துறை | 79 |
| 17. | திருகோணமலை | கந்தளாய் | 80 |
| | | திருகோணமலை | 81 |
| | | மூதூர் | 82 |
| | | பதவி பராக்கிரமபுர | 83 |
| | | கிண்ணியா | 84 |
| 18. | குருநாகல் | குளியாப்பிட்டி | 85 |
| | | பிங்கிரிய | 86 |
| | | நாரம்மல | 87 |
| | | பொல்கஹவெல | 88 |
| | | குருநாகல் | 89 |
| | | இப்பாகமுவ | 90 |
| | | தொடங்கஸ்லந்த | 91 |
| | | மொரத்திஹ | 92 |
| | | நிக்கவெரட்டியா | 93 |
| | | மாகோ | 94 |
| 19. | புத்தளம் | வென்னப்புவ | 95 |
| | | மாதம்பே | 96 |
| | | சிலாபம் | 97 |
| | | புத்தளம் | 98 |
| 20. | அநுராதபுரம் | மதவாச்சி | 99 |
| | | கெக்கிராவ | 100 |
| | | அநுராதபுரம் | 101 |
| | | கலென்பிதுனுவெவ | 102 |
| | | கஹட்டகஸ்திகிலிய | 103 |
| 21. | பொலன்னறுவை | பொலன்னறுவை | 104 |
| | | ஹிங்குராக்கொட | 105 |
| 22. | பதுளை | பண்டாரவளை | 106 |
| | | வெலிகட | 107 |
| | | பதுளை | 108 |
| | | பசறை | 109 |
| | | மஹியங்கன | 110 |
| | | கிராந்துருகோட்டை | 111 |
| | | ஹசலக | 112 |
| 23. | மொனராகலை | பிபிலை | 113 |
| | | மொனராகலை | 114 |
| | | வெல்லவாய | 115 |
| 24. | இரத்தினபுரி | எஹலியகொட | 116 |
| | | இரத்தினபுரி | 117 |
| | | பெல்மடுல்ல | 118 |
| | | பலாங்கொட | 119 |
| | | கலவான | 120 |
| | | எம்பிலிபிட்டிய | 121 |
| 25. | கேகாலை | கேகாலை | 122 |
| | | ரம்புக்கன | 123 |
| | | மாவனெல்ல | 124 |
| | | ருவன்வெல்ல | 125 |

07-169

---

திருத்தம்

**முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார்) வகுதி - 03 சேவைத் தொகையில் செய்து காட்டுநர் (திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021**

மேற்கூறப்பட்ட ஆட்சேர்ப்பு சம்பந்தமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2228 ஆம் இலக்க மற்றும் 2021, மே மாதம் 13 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

02. இதன்படி தற்போதுள்ள கோவிட் தொற்று நோய் சூழ்நிலை காரணமாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2021.07.15 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

03. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிற நிபந்தனைகள் மாறாது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எஸ். சீ. ஜகத்,
பணிப்பாளர் நாயகம்.

07-189

---

**கவனிக்க.- 2021.07.09 ஆந் திகதி வெளியாகும் வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஅ) - இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**தொழில் உறவுகள் அமைச்சு**

**தொழில் திணைக்களம்**

தொழில் திணைக்களத்தில், மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பச் சேவை வகையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

தொழில் அமைச்சின் கீழுள்ள தொழில் திணைக்களத்தில், மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பச் சேவை வகையின் பதவிகளுக்கு 2021.03.31 இல் உள்ள வெற்றிடங்களுக்குப் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, திறந்த அடிப்படையில், 2021.08.13 என்னும் முடிவுத் திகதியில், இவ்வறிவித்தலின் பந்தி 3.0 இல் குறிப்பிட்டவாறு தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.0 **பதவிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை :**

| இலக்கம் | பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கைவிரலடையாளம் பரிசோதிக்கும் அலுவலர் | 3 |
| 2 | ஆராய்ச்சி உதவியாளர் | 3 |
| 3 | கட்டிடப் பரிசோதகர் | 3 |
| 4 | படவரைஞர் | 2 |
| 5 | தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) | 1 |
| 6 | தொழில்நுட்ப அலுவலர் (எலக்ரிக்கல்) | 1 |

1.1 பதவிக்கான கடமையின் தன்மை - நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துமுடையதுமாகும். (எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் ஓய்வூதிய திட்டம் தொடர்பில் எடுக்கப்படும் கொள்கை முடிபுகளுக்கு உட்படும்)

1.2 பதவியின் கடமைகளின் தன்மைகள் :

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியின் பெயர் | கடமை |
|---|---|---|
| 1. | கைவிரலடையாளம் பரிசோதிக்கும் அலுவலர் | உரிய பிரிவின் வேண்டுகோளின்படி, ஊழியர் சேமலாப நிதி நன்மைக்கான விண்ணப்பங்களில் கோரப்படும் கூடிய பெறுமதிகளுக்கு, அப்படிவங்களிலும், 'ஏ', 'பீ', 'எச்' படிவங்களிலும் காணப்படும் கைவிரலடையாளங்களை, உரிய ஆளின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதில் சிக்கல் உள்ளபோது பரிசோதித்தல், கைவிரலடையாளங்களைப் பரிசோதித்தலில் மற்றவர்களுக்குப் பயிற்சியளித்தல், திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |
| 2. | ஆராய்ச்சி உதவியாளர் | வேலைத்தளங்களில் தொழில்கள் தொடர்பான சுற்றுச்சூழல் அளவைகள், உயிரியல் அளவைகள் மற்றும் விஞ்ஞான ரீதியான அளவைகள் ஆகியவற்றை எடுப்பதில் ஆராய்ச்சி அலுவலர் (தொழிற் சுகாதாரம்), சிரேட்ட ஆராய்ச்சி அலுவலர் (தொழிற் சுகாதாரம்), பிரதி ஆணையாளர் (தொழிற் சுகாதாரம்) ஆகியோருக்கு உதவுதல், (தொழிற் சுகாதாரம்), சூழல்களுக்கான அளவைகளை எடுப்பதற்கான உபகரணங்களின் சிறந்த செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப் பாயிருத்தல். அவ்வுபகரணங்களின் பாவனையையும் பேணுகையையும் கவனித்தல். தொழிற் தளச் சூழலிலுள்ள இரசாயன அனர்த்தங்களின் தன்மையைத் தீர்மானிப்பதற்கான வளி மாதிரிகளைச் சேகரிக்கும் செயற்பாடுகளை ஒழுங்குசெய்தலும், அவ்வாறு சேகரிக்கப்படும் மாதிரிகளைப் பரிசோதிப்பதற்குத் தயார் செய்தல். ஆய்வுகூட உபகரணங்களைப் பேணுதலும், அவற்றை முறையாகப் பயன்படுத்துவதில் ஆராய்ச்சி அலுவலர்களுக்கு உதவுதல். வேலைத்தலங்களில் தொழில் பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ளும் போது ஊழியர்களின் உடல்ரீதியான அளவீடுகளை எடுத்தலும், அவற்றை ஆராய்தலும். வேலைத்தளமொன்றில் ஊழியர்களின் இரைச்சலைத் தாங்கும் அளவுகள் மற்றும் அவர்களது சுவாச நிலைமை பற்றிய பரிசோதனைகளில் ஆராய்ச்சி அலுவலர்களுக்கு அவசியமானபோது உதவுதல். திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |
| 3. | கட்டிடப் பரிசோதகர் | தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான தொழிற் செயலகக் கட்டிடத்தின், பிராந்திய தொழில் அலுவலகங்களின் புதுப்பித்தல் செயற்பாடுகள் மற்றும் புதிய கட்டிட வேலைகளின் மேற்பார்வை. வேலைகளுக்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளல். கட்டிட ஒப்பந்தக்காரர்களின் வேலைகளைப் பரிசோதித்தல். கட்டிடப் பொருட்களின் அளவுப் பட்டியல்களைத் தயாரித்தல். தொழில்நுட்ப அலுவலர்களின் வேலைகளை மேற்பார்வை செய்தல். திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |
| 4. | படவரைஞர் | பொறியியலாளரால் தயாரிக்கப்படும் திட்டங்களுக்கு படங்கள் வரைதல். திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியின் பெயர் | கடமை |
|---|---|---|
| 5. | தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) | தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான தொழிற் செயலகக் கட்டிடத்தின், பிராந்திய தொழில் அலுவலகங்களின் புதுப்பித்தல் செயற்பாடுகள். புதிய கட்டிடப் பணிகளை மேற்பார்வை செய்தல். மதிப்பீடுகளைத் தயாரித்தல். கட்டிட ஒப்பந்தக்காரர்களின் வேலைகளைப் பரிசோதித்தல். கட்டிடப் பொருட்களின் அளவுப் பட்டியல்களைத் தயாரித்தல். தொழில்நுட்ப அலுவலர்களின் வேலைகளை மேற்பார்வை செய்தல். திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |
| 6. | தொழில்நுட்ப அலுவலர் (எலக்ரிக்கல்) | புதிய கம்பி இணைப்பு முறைமைகள் தொடர்பான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வளிக் குளிராக்கிகளைப் பொருத்துதல், வளிக் குளிராக்கிகளைப் பராமரித்தல் மற்றும் சீர் செய்தல், மின்சுற்று முறைமைகளைப் பரிசோதித்தல், மேலுள்ளவற்றை நவீனமயப்படுத்துவதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல், மின் உற்பத்தியாக்கிகளை பரிசோதித்தல் மற்றும் மின்னியல் தொழில்நுட்பவியலாளருடன் மின்னியல் உபகரணங்களை பரிசோதித்ததன் பின்னர் பிழைகளுக்கான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் மின் உபகரணங்கள் சீர் செய்வதனைப் பரிசோதித்தல், ஒலிபெருக்கி முறைமைகள் மற்றும் தொலைபேசி வலையமைப்பினைப் பரிசோதித்தல் வெளியிலுள்ள நிறுவனங்களால் செய்யப்படும் மின்னியல் வேலைகளைப் பரிசோதித்தல், மாவட்ட அலுவலகங்களின் பராமரிப்புக்கள் மற்றும் சீர்செய்தல்கள் வேலைகளை பரிசோதித்தல் மற்றும் திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |

2.0 **ஆட்சேர்ப்பு திட்டமுறை :**

2.1 மேற்படி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு, பயிற்சிக்குரிய வகுப்பு (இரண்டு வருட பயிற்சிக்காலம்), பயிற்சிக்குரிய வகுப்பு (ஒரு வருட பயிற்சிக்காலம்), வகுப்பு III (நேரடி ஆட்சேர்ப்பு) ஆகிய 3 வகுப்புகளின் கீழ், விண்ணப்பதாரிகளின் தகைமைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வகுப்பிற்கும் உரிய தகைமைகள் பந்தி 3.0 இல் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பிக்கும் வகுப்பு விண்ணப்பதாரர்களால் விண்ணப்பப் படிவங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

2.2 ஓர் எழுத்துப் பரீட்சை மற்றும் பொதுவான ஒரு நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் அடிப்படையில், முதலில் வகுப்பு III (நேரடி ஆட்சேர்ப்பு) இற்கு ஆட்சேர்ப்பு நடைபெற்று, இரண்டாவதாக பயிற்சிக்குரிய வகுப்பிற்கும் (ஒரு வருட பயிற்சிக்காலம்), மூன்றாவதாக பயிற்சிக்குரிய வகுப்பிற்கு (இரண்டு வருட பயிற்சிக்காலம்) ஆகியவற்றுக்கும், பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும்.

2.2.1 மேற்படி மூன்று தரங்களிலும், முதலில் தரம் III இற்கு நேரடியான ஆட்சேர்ப்பு இடம்பெறும். தகைமை பெறும் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டு, பொதுவானதொரு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்பின் எண்ணிக்கையானது, வகுப்பு III (நேரடி ஆட்சேர்ப்பு) இற்கு விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளில், அவர்கள் எழுத்துப் பரீட்சையில் பெறும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிலிருந்து தீர்மானிக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது.

2.2.2 வகுப்பு III இற்கு நேரடி ஆட்சேர்ப்பிற்குத் தகைமை பெறுவோரது எண்ணிக்கை போதுமானதாக இல்லாத பட்சத்தில், மிகுதியான வெற்றிடங்கள், பயிற்சிக்குரிய வகுப்பிற்கு (ஒரு வருட பயிற்சிக்காலம்) விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளால் நிரப்பப்படும். இதில் தகைமை பெறும் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டு, பொதுவானதொரு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்பின் எண்ணிக்கையானது, பயிற்சிக்குரிய வகுப்பிற்கு (ஒரு வருட பயிற்சிக்காலம்) விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளில், அவர்கள் எழுத்துப் பரீட்சையில் பெறும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிலிருந்து தீர்மானிக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது.

2.2.3 மேற்கூறபட்ட 2.2.1 மற்றும் 2.2.2 ஆகியவற்றின்படி தகைமை பெறும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கைகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில், மிகுதியான வெற்றிடங்கள், பயிற்சிக்குரிய வகுப்பிற்கு (இரண்டு வருட பயிற்சிக்காலம்) உரிய தகைமைகளைக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளால் நிரப்பப்படும். இதில் தகைமை பெறும் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டு, பொதுவானதொரு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்பின் எண்ணிக்கையானது, எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளில், அவர்கள் எழுத்துப் பரீட்சையில் பெறும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிலிருந்து தீர்மானிக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது.

2.3 பொதுவான நேர்முகப் பரீட்சையானது, பொருத்தமான உடல் ரீதியான தகைமையையும் சான்றிதழ்களையும் பரீட்சிப்பதற்காக நடாத்தப்படும். இந்த பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு, புள்ளிகளேதும் வழங்கப்படமாட்டாது.

3.0 **தகைமைகள் :**
ஒவ்வொரு வகுப்பிற்குமுரிய தகைமைகள் பின்வருமாறு.

3.1 கல்வி மற்றும் தொழிற் தகைமைகள்.

3.1.1 பயிற்சிக்குரிய வகுப்பு (இரண்டு வருட பயிற்சிக்காலம்)

(அ) **கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில், சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம் (தூய கணிதம்/ பிரயோக கணிதம்/ இணைந்த கணிதம்) / உயிரியல் விஞ்ஞானம் (உயிரியல்/ தாவரவியல்), பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் தொழில்நுட்பம் (உயிரியல் தொழில்நுட்பம், இயந்திரவியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்) ஆகியவற்றில் 02 பாடங்களில் சித்தி.

3.1.2 பயிற்சிக்குரிய வகுப்பு (ஒரு வருட பயிற்சிக் காலம்)

(அ) **கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில், சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம் (தூய கணிதம்/ பிரயோக கணிதம்/ இணைந்த கணிதம்) / உயிரியல் விஞ்ஞானம் (உயிரியல்/ தாவரவியல்), பௌதிகவியல், இரசாயனவியல் ஆகியவற்றில் 02 பாடங்களில் சித்தி.

(ஆ) **தொழிற் தகைமைகள்**.-

(i) மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து, இப்பதவிக்குரிய துறையில் ஒரு பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து, தொழில்நுட்பத்திற்கான தேசிய சான்றிதழைக் கொண்டிருத்தல் (உ-ம் : தொழில் நுட்பத்திற்கான தேசிய சான்றிதழ் : சிவில்/மின்னியல்/இயந்திரவியல்).

அல்லது

(ii) மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து, படம் வரைதலில் ஒரு வருட முழுநேரப் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து உரிய சான்றிதழைக் கொண்டிருத்தல்.

அல்லது

(iii) மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து, இப்பதவிக்குரிய துறையில் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து, உரிய சான்றிதழைக் கொண்டிருத்தல்.

அல்லது

(iv) உயர் கல்வி அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்களுடனான, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்பவியல் தகைமைகளுக்கு ஒவ்வொரு விதத்திலும் சமமானதும், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதுமான வேறு ஏதாவது தொழில்நுட்பவியல் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

3.1.3 வகுப்பு III (நேரடி ஆட்சேர்ப்பு)

(அ) **கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில், சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம் (தூய கணிதம்/ பிரயோக கணிதம்/ இணைந்த கணிதம்) / உயிரியல் விஞ்ஞானம் (உயிரியல்/ தாவரவியல்), பௌதிகவியல், இரசாயனவியல் ஆகியவற்றில் 02 பாடங்களில் சித்தி.

(ஆ) **தொழிற் தகைமைகள்**.- பின்வரும் தகைமைகளுள் ஆகக்குறைந்தது ஒன்றையாவது பூர்த்தி செய்திருத்தல்.

(i) மொரட்டுவ பல்கலைகழகத்தால் அல்லது அம்பாறை - ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா.

(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட பொறியியலில் தேசிய டிப்ளோமா.

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா.

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட தொழில்நுட்பவியல் டிப்ளோமா.

அல்லது

(v) இலங்கை, பொறியியலாளர்கள் நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பொறியியல் பரீட்சையின் பகுதி II வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

(vi) உரிய துறையில் தேசிய தொழிற்பயிற்சித் தகைமையின் (NVQ) மட்டம் 6 ஐப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்களுடனான, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு ஒவ்வொரு விதத்திலும் சமமானதும், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதுமான வேறு ஏதாவது தொழில்நுட்பவியல் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

3.2 **உடற்றகைமைகள்**.- நாட்டின் எப்பாகத்திலும் வேலை செய்வதற்கு தேவையான மற்றும் உரிய பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய உடல் மற்றும் உளத்தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3.3 **ஏனைய தகைமைகள்**.-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) சிறந்த குணநலன்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ;
(iii) ஏதேனும் மதமொன்றின் மதகுருவாக நிலைப்படுத்தப்பட்ட எவரும் இதற்குரிய பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெற மாட்டார்.
(iv) விண்ணப்பங்களைக் கோருகின்ற அறிவித்தலில் குறித்துக்கூறப்படுகின்ற திகதியன்று, குறித்துக்கூறப்படும் வயதையும், மற்றைய தேவையான எல்லாத் தகைமைகளையும் ஒவ்வொரு விதத்திலும் திருப்திப்படுத்தினால் மாத்திரமே, சேவைக்குரிய ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமைகளை விண்ணப்பதாரிகள் கொண்டிருப்பதாகக் கருதப்படுவார்கள்.

4.0 **வயதெல்லை**.- விண்ணப்பங்களின் முடிவுத் திகதியன்று ஆகக்குறைந்த வயது 18 இற்குக் குறையாமலும், ஆகக்கூடிய வயது 30 இற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.

5.0 **வேலைக்குரிய நியதிகளும் சேவைக்குரிய நிபந்தனைகளும்**.-

5.1 உரிய பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின்னர், பயிற்சிக்குரிய வகுப்பிற்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், தொழில் ஆணையாளர் அதிபதி தீர்மானிக்கும் நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். அப்பரீட்சையில் சித்தியடைந்ததாக அந்நிறுவனத்தால் வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பிப்பதன் மீது, உரிய விண்ணப்பதாரி இச்சேவையின் வகுப்பு III இற்கு உள்ளீர்க்கப்படுவார்.

5.2 மேற்படி பரீட்சையில் சித்திபெறத் தவறும் பயிற்சியாளர்களுக்கு மேலும் ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு பயிற்சிக் காலத்தை நீடிப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிற்சியாளரது சேவை முடிவுறுத்தப்படும்.

5.3 திறந்த போட்டிப் பரீட்சையின் முடிவுகளின்படி வகுப்பு III இற்கான பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அலுவலர் 03 வருடங்களுக்கான தகுதிகூர் காலத்திற்கு உரியவராவார். தகுதிகாண் காலத்தில் ஒதுக்கப்பட்ட கடமைகளை செய்து முடித்தல் மற்றும் ஒழுக்கத்தை பேணுதல் என்பன திருப்தியானது எனவும் மற்றும் அவர் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் மற்றும் அரச கரும மொழியில் தேர்ச்சியும் அடைந்திருப்பின் தகுதிகாண் காலம் முடிந்ததன் பின்னர் அவரது பதவியானது நிரந்தரமாக்கப்படும்.

5.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 மற்றும் அதனுடனான சுற்றறிக்கைகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கமைவாக, சேவைக்குச் சேரும் மொழிக்கு மேலதிகமான மற்றைய அரசகரும மொழியிலான தேர்ச்சி, பதவிக்கு நியமிக்கப்பட்டு 3 வருட காலத்தினுள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

5.5 இந்த நியமனமானது, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், தாபனக் கோவையின் ஏற்பாடுகள் அவற்றுக்கு இனிமேல் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், நிதிப் பிரமாணங்கள், திணைக்களக் கட்டளைகள், 2015, செத்தெம்பர் 01 இல் 1930/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புகள், 2017.03.07 இல் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதும் 2018.03.20 இல் திருத்தப்பட்டதுமான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்படும் நியதிகளும் நிபந்தனைகளும், சேவைப் பிரமாணக் குறிப்பிலும் ஆட்சேர்ப்புத் திட்டத்திலும் இனிமேல் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் ஆகியவற்றுக்கு உட்பட்டதாக இருக்கும்.

5.6 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் கொழும்பு 05, நாராஹென்பிட்டியில் அமைந்துள்ள தொழிற் திணைக்களத் தலைமை அலுவலகத்திலேயே கடமையாற்றுதல் வேண்டும்.

6.0 **சம்பள அளவுத்திட்டம்**.-

6.1 பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 03/2016 இன் அட்டவணை 1 இன் பிரகாரம், இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம், ரூபா 31,040 - 10× 445 - 11× 660 - 10× 730 - 10× 750 - ரூபா 57,550.00 ஆகும்.

6.2 பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 03/2016 இன் பிரகாரம் பயிற்சிக்குரிய வகுப்பிற்குரியவர்களுக்கான படி -

1 ஆவது வருடம் - ரூபா 27,140.00
2 ஆவது வருடம் - ரூபா 27,440.00

7.0 **எழுத்துப் பரீட்சை**.-

(அ) எழுத்துப் பரீட்சையானது இரண்டு பாடங்களுக்கான வினாத் தாள்களைக் கொண்டிருக்கும் இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழியானது பின்னர் மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

| பாடம் | கால அளவு | ஆகக் கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. துறை சார்ந்த தொழில்நுட்பப் பரீட்சை | 02 மணித்தியாலம் | 100 | 40 |

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இரண்டு பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். எல்லாப் பரீட்சார்த்திகளும் நுண்ணறிவுப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், துறை சார்நத தொழில்நுட்பப் பரீட்சை, ஒவ்வொரு பரீட்சார்த்தியும் விண்ணப்பிக்கும் பதவிக்கு ஏற்ற வகையில் மாறுபடும். ஒவ்வொரு பதவிக்குமுரிய பரீட்சைப் பாடத்திட்டம் பந்தி 8.0 இல் தரப்பட்டுள்ளது.

(இ) நிரப்பப்படும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை, நியமனம் வழங்கப்படும் திகதி ஆகியன தொழில் ஆணையாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும்.

(ஈ) பல பரீட்சார்த்திகள் ஒரே அளவிலான மொத்தப் புள்ளிகளைப் பெற்றால், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய தொழில் ஆணையாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும் என்பதுடன். இது தொடர்பில் இதுவே இறுதியான முடிவாகவும் இருக்கும்.

8.0 **எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்வருமாறு** :

| வினாத்தாள் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. நுண்ணறிவுப்பரீட்சை | இவ் வினாத்தாள் பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான அறிவார்ந்த விடயங்கள், பகுப்பாய்வுத் திறன்கள், தீர்மானம் எடுக்கும் திறன் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் வினாக்களைக் கொண்டிருக்கும். |
| 2. துறை சார்ந்த தொழில்நுட்பப் பரீட்சை | (a) கைவிரலடையாளம் பரிசோதிக்கும் அலுவலர்<br>(i) கைவிரலடையாளத் துறையின் வரலாறு<br>(ii) கைவிரலடையாளத் துறையின் முன்னோடிகள்<br>(iii) கைவிரலடையாளத்தைப் பதித்தலும் அதன் சிறப்பியல்பு களும்<br>(iv) கைவிரலடையாளங்களைப் பெறுவதன் முக்கியத்துவம்<br>(v) கைவிரலடையாளங்களின் அமைப்புகள் (patterns)<br>(vi) கைவிரலடையாளங்களைப் பெறுதல்<br>(vii) ஆளாருவரது அடையாளத்தை உறுதிப்படுத்தும் முறைகள் (Methods)<br>(viii) ஆவணங்களிலுள்ள பெருவிரலடையாளங் களை ஒப்பிட்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்<br>(ix) நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கைவிரலடையாளங்களை ஒப்பிடும் முறை.<br>(x) கைவிரலடையாளங்களின் அமைப்புகளும், அலை போன்ற சிறப்பியல்புகளும் (ridgecharacteristics)<br>(xi) கைவிரலடையாளங்களின் வகுப்பாக்கம்<br>(xii) கைவிரலடையாளங்கள் தொடர்பான விதிகள் |
| | (b) ஆராய்ச்சி உதவியாளர்<br>(i) வேலையின் சூழல் அளவைகள், உயிரியல் அளவைகள், விஞ்ஞான ரீதியான அளவைகள் ஆகியவற்றை எடுப்பது பற்றிய அறிவு.<br>(ii) வேலைச்சூழலின் பௌதிக அளவைகளை எடுக்கும் உபகரணங்கள் பற்றிய அறிவு<br>(iii) இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் அவற்றின் நச்சுத்தன்மையும் பற்றிய அறிவு<br>(iv) அதிர்வு, வெப்பம், மின்னேற்றமடைதல் (ionizing) மின்னறிக்க மடைதல் (non-ionizing) கதிர்வீச்சு ஆகியவை பற்றிய அடிப்படையான அறிவு.<br>(v) பகுப்பாய்வு முறைகளினூடாக இரசாயனப் பதார்த்தங்களை அடையாளங் காணுதல்<br>(vi) ஆய்வுகூட உபகரணங்கள் பற்றிய அறிவு |
| | (c) கட்டிடப் பரிசோதகர், தொழில்நுட்ப அலுவலர் (சிவில்)<br>(i) கட்டிடங்களைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல் பற்றிய அறிவு.<br>(ii) அளவுகளைப் (quantities) பெற்று, மதிப்பீடுகளைத் தயாரித்தல்/ அளவைகளை (measurements) எடுத்தலும் மட்டங்களை (levels) அளவிடுதலும் பற்றிய அறிவு |
| | (d) தொழில்நுட்ப அலுவலர் (மின்னியல்)<br>(e) மின்னியல் தொடுப்புகள் மற்றும் மின்சுற்றுக்கள் தொடர்பான அறிவு. |
| | படவரைஞர்<br>(i) மதிப்பீடுகளைத் திட்டமிடுதலும், மதிப்பீடுகளைத் தயாரித்தலும் பற்றிய அறிவு.<br>(ii) கட்டிடத் தொழில்நுட்பம் பற்றிய வரைபுகள் குறித்த விளக்கமும், வரைதலும். |

9.0 **பொதுவான நேர்முகப் பரீட்சை**.- பொதுவான நேர்முகப் பரீட்சை, தகைமைகளைப் பரிசோதிப்பதற்காக மாத்திரமே நடாத்தப்படும் என்பதுடன், புள்ளிகளேதும் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக எடுத்துக்கொள்ளப்படலாகாது.

10.0 **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமாக ரூபா 500.00 அறவிடப்படும். அது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்பதாக, இலங்கை வங்கி, நாராஹேன்பிட்ட கிளையில் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் கணக்கு இல. 0071451995 இற்கு வரவிடத்தக்கதாக செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரியின் பெயரில் பெறப்படும் வங்கி வைப்புச்சீட்டு விண்ணப்பப் படிவத்தில் குறித்த இடத்தில் இலகுவில் அகற்ற முடியாத வகையில் உறுதியாக ஒட்டப்படல் வேண்டும். (பற்றுச்சீட்டின் புகைப்பட பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனமானதாக இருக்கலாம்.)

**குறிப்பு**.- மேலும், ஒரு முறை செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது இப்பரீட்சை இரத்துச் செய்யப்பட்டாலன்றி எக்காரணம் கொண்டும் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட முடியாது. மேலும் இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் இன்னொரு பரீட்சைக்குக் கட்டணமாகவும் மாற்றப்பட முடியாது.

11.0 **விண்ணப்பிக்கும் முறை**.-

11.1 இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தைப் பயன்படுத்தி, தமக்கான விண்ணப்பப் படிவத்தை விண்ணப்பதாரியே தயாரித்துக் கொள்ள வேண்டும். அது 21 × 29 செ. மீ. (A4) அளவு கடதாசிகளின் இரு பக்கங்களிலும். 1.0 - 8.0 ஆகியன முதற்பக்கத்திலும், 9.0-11.1 ஆகியன இரண்டாம் பக்கத்திலும், 11.2 - 12.0 ஆகியன மூன்றாம் பக்கத்திலும், 13.0 - 16.0 ஆகியன நான்காம் பக்கத்திலும், 17.0 இல் உள்ளன ஆகியன ஐந்தாம் பக்கத்திலும் வரத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

11.2 விண்ணப்பப் படிவங்கள் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே தயாரிக்கப்பட வேண்டும்.

11.3 மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்திராத மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

11.4 இப்பரீட்சையானது கொழும்பில் அமைக்கப்படும் பரீட்சை மண்டபங்களில் மாத்திரம் 2021, செத்தெம்பர் 26 ஆந் திகதி நடைபெறும்.

11.5 விண்ணப்பப் படிவம் கிடைத்தமையிட்டு எவ்வித அறிவித்தலும் வழங்கப்படமாட்டாது. தபாலில் காணாமற்போகும் விண்ணப்பங்கள் தொடர்பான முறைப்பாடு ஏதும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

11.6 பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதலானது, விண்ணப்பதாரி பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படுவதாகக் கொள்ளப்படலாகாது.

11.7 "தொழில் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவையின் ........... பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" என, விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட வேண்டும். இதில் விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் பதவிப் பெயர் இதிலுள்ள இடைவெளியில் சேர்க்கப்பட வேண்டும்.

11.8 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், ஒரு பாடசாலை அதிபரால், அல்லது ஒரு சமாதான நீதிவானால், அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரால், அல்லது முப்படைகளின் ஆணையிடும் அதிகாரி ஒருவரால், அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானி மூலம் பெயரிடப்பட்ட அதிகாரி ஒருவரால், அல்லது 6/ 2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தில் நிரந்தரமான மூன்றாம் நிலை அல்லது சிரேட்ட பதவி வகிக்கும் அலுவலர் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

11.9 பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பும், அல்லது நிரப்பாமல் விடும், அல்லது அவற்றில் ஒரு பகுதியை மாத்திரம் நிரப்பும் தீர்மானத்தையும், இது தொடர்பான மற்றைய எல்லா விடயங்களையும் பற்றிய தீர்மானங்களையும் எடுப்பதற்கான இறுதி அதிகாரம் தொழில் ஆணையாளர் நாயகத்திற்கே உள்ளது.

12.0 **விண்ணப்பங்களை அனுப்புதல்**.- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமானது பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு 2021, ஒகத்து மாதம் 13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்பட வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்,
இரண்டாம் தளம்,
தொழிற் செயலகம்,
கொழும்பு - 05.

13.0 **பரீட்சைக்குத் தோற்றுதல்**.-

(அ) தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி, எல்லா வகையிலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பும் விண்ணப்பதாரிகளுக்கு, பரீட்சை நடைபெறவுள்ள 2021, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்பாக பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவார். தனது அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தியொருவர் தனக்குரிய பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவ்வாறு பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது அனுமதி அட்டையை, அதில் தனது சான்றுப்படுத்தப்பட்ட கையொப்பத்துடன், பரீட்சை நடைபெறும் தினத்தன்று பரீட்சை மண்டப பிரதான மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(இ) அனுமதி அட்டைகள் பரீட்சை நடைபெறும் தினமான 2021.09.26 ஆந் திகதியிலிருந்து ஒரு கிழமைக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் 0112786541 அல்லது 0112786542 என்ற தொலைபேசி ஊடாக தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின்

பணிப்பாளர் அதிபதி அவர்களுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். உங்களிடமிருக்கும் பணம் செலுத்திய வங்கிக் கணக்குக் கூற்று மற்றும் பதிவுத் தபால் பற்றுச் சீட்டு மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியவற்றின் சான்றுப்படுத்திய பிரதிகளுடன் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்துடன் தொடர்பு கொள்ளுதல் மிகவும் பயனுடையதாகும்.

14.0 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்தும் வகையில் பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், தமது ஆளடையாளத்தை நிரூபிக்கும் வகையில், பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

15.0 **பொய்யான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான தண்டனை.**- பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவரெனக் காணப்பட்டால், பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அவரது தகைமை, பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னரோ, அல்லது பரீட்சை எழுதும்போதோ, அல்லது பரீட்சைக்குப் பின்னரோ இரத்துச் செய்யப்பட இடமுண்டு. மேலும், தெரிந்துகொண்டே பொய்யான தகவல்களைச் சமர்ப்பிக்கும் அல்லது வேண்டுமென்றே ஏதேனும் தகவலை மறைக்கும் விண்ணப்பதாரி, பின்னர் சேவையிலிருந்து பதவிநீக்கத்துக்கு ஆளாக நேரிடலாம்.

16.0 இந்த அறிவித்தலில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் ஏதேனும் மாறுபாடுகள் காணப்படின், சிங்கள மொழியிலான அறிவித்தலே கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

தொழில் ஆணையாளர் நாயகம்.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2021, யூன் 29.

மாதிரி விண்ணப்பப் படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**தொழில் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021**

01. மொழி - நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2 ☐ (உரிய இலக்கத்தை பெட்டியினுள் எழுதுக.)
ஆங்கிலம் - 3
நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப் படிவம் நிரப்பப்பட வேண்டும்.

2.0
2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (முடிவினில் வருமாறு)
.............................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்தில்) உ-ம் : (SILVA A. B. D. P. A.)

2.2 முழுப்பெயர் :- .............................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்தில்)

2.3 முழுப்பெயர் :- .............................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

3.3.1 நிரந்தர முகவரி : (ஆங்கில பெரிய எழுத்தில்) (அனுமதி அட்டை இம்முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும்)
.............................................................................................................
.............................................................................................................

3.2 நிரந்தர முகவரி : (சிங்களத்தில்/தமிழில்)
.............................................................................................................
.............................................................................................................

04. பால் : (ஆண் - 0, பெண் - 1) ☐
(உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் இடுக.)

05. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

06. விவாக நிலை : (விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் -2) ☐

07. 7.1 பிறந்த திகதி :
வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ நாள் : ☐☐
7.2 வயது : விண்ணப்ப முடிவுத் திகதி 13.08.2021 இல் வயது :
வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

08. தொலைபேசி இலக்கம். : ☐☐☐☐☐☐☐☐☐☐

09. விண்ணப்பிக்கும் பதவி (உரிய இடத்தில் ✓ என குறிப்பிடுக.)

| இல. | பதவி | |
|---|---|---|
| 1. | கைவிரலடையாளம் பரிசோதிக்கும் அலுவலர் | |
| 2. | ஆராய்ச்சி உதவியாளர் | |
| 3. | கட்டிடப் பரிசோதகர் | |
| 4. | படவரைஞர் | |
| 5. | தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) | |
| 6. | தொழில்நுட்ப அலுவலர் (மின்னியல்) | |

10. வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 3.0 இன் பிரகாரம் விண்ணப்பிக்கும் வகுப்பு. (உரிய இடத்தில் ✓ என குறிப்பிடுக.)

| | | |
|---|---|---|
| 1. | பயிற்சிக்குரிய வகுப்பு (இரண்டு வருட பயிற்சிக்காலம்) | |
| 2. | பயிற்சிக்குரிய வகுப்பு (ஒரு வருட பயிற்சிக்காலம்) | |
| 3. | வகுப்பு III (நேரடி ஆட்சேர்ப்பு) | |

11. கல்வித் தகைமைகள் :

11.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை : (முதலாம் அமர்வு)
(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :......................
(ii) சுட்டிலக்கம் :.....................
(iii) பெறுபேறுகள் :

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

11.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை : (இரண்டாம் அமர்வு)
(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :......................
(ii) சுட்டிலக்கம் :.....................
(iii) பெறுபேறுகள் :

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

11.3 க. பொ. த. (உ. த.) பரீட்சை :
(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :......................
(ii) சுட்டிலக்கம் :.....................
(iii) பெறுபேறுகள் :

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

12. தொழிற் தகைமைகள் :

| பயிற்சிநெறி | சான்றிதழ் வழங்கிய நிறுவனம் | பயிற்சிநெறியின் காலம் | சான்றதழின் இலக்கமும், செல்லுபடியாகும் திகதியும் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

13. குற்றவியல் குற்றச்சாட்டிற்காக எப்போதாவது நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டீர்களா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக.................

14. முன்பு எப்போதாவது உங்களது அரசாங்க சேவை முடிவுறுத்தப்பட்டதா? ...........................................
அவ்வாறாயின், விபரங்களையும் முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும் தருக :.......................

15. பரீட்சைக் கட்டணம்.-
15.1 செலுத்திய தொகை :....................
15.2 பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கிக் கிளையின் பெயர் :.........................................
15.3 செலுத்திய திகதி :................................
15.4 பற்றுச்சீட்டு இல. :...........................

பரீட்சைக்கட்டணம் செலுத்திய வங்கி வைப்புச் சீட்டினை உறுதியாக ஒட்டவும் (அதன் நிழல் பிரதி ஒன்றை வைத்திருத்தல்)

16. விண்ணப்பதாரியின் சான்றிதழ் .-

வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விதிகள், விதிமுறைகளின் பிரகாரம் இந்த, திறந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமைகளை ...................................... ஆகிய நான் கொண்டிருக்கிறேன் எனவும், இந்த விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை எனவும் நான் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன். மேலும், இப்பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்படுவதற்கு நான் சம்மதிக்கிறேன். அவ்வாறே, இப்பரீட்சைக்குரிய ஏற்பாடுகளைக் கொண்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம், நான் தகுதியற்றவரெனக் காணப்பட்டால், இப்பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின்போதோ, அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சைக்கான தகைமையை நான் இழக்கச் செய்வதற்கு எடுக்கப்படத்தக்க முடிவை, எவ்வித நட்டஈடுமின்றி ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேன். மேலும், இப்பரீட்சையை நடாத்துவதிலும் இதன் பெறுபேறுகளை வெளியிடுவதிலும் தொழில் ஆணையாளர் அதிபதியால் வழங்கப்படும் விதிமுறைகளுக்கு உட்படுவேன் என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். மேலும், நான் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால், நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்குச் சம்மதிக்கிறேன்.

திகதி. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
விண்ணப்பதாரரின் கையொப்பம்

17. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 11.8 இன் பிரகாரம்).- இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ....................................... (விண்ணப்பதாரியின் முழுப்பெயர்) எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை இதில் ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன். அவர் தனது கையொப்பத்தை என் முன்னிலையில் ................................... ஆந் திகதியன்று இட்டார் எனவும் உறதிப்படுத்துகின்றேன்.

திகதி. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரது முழுப் பெயர் :------.
பதவி :-------.
முகவரி :-------.

(அலுவலக பதவி முத்திரை இடப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

07-120

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## பொருட்கள் விற்பனவும் பிறவும்

### நீதிவான் நீதிமன்றம் - சம்மாந்துறை

பகிரங்க ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2021.07.17 ஆந் திகதிகாலை 09.00 மணிக்கு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றையதினம் காலை 08.00 மணிமுதல் 09.00 மணிவரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களைப் பார்வையிடமுடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கானஅதிகாரம் இந் நீதமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏலவிற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏலவிற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப் படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஐ. என். ரிஸ்வான்,
நீதிவான்,

நீதிவான் நீதிமன்றம்,
சம்மாந்துறை.
2021.07.06.

ஏலவிற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்.

| தொ. இல | வழக்கிலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப்பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 18170/PC/17 | 97-5527 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்காக மட்டும்) | 01 |
| 2 | 16365/PC/16 | 144-9066 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்காக மட்டும்) | 01 |
| 3 | 7959/PC/13 | 147-2352 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்காக மட்டும்) | 01 |
| 4 | 25964/Misc/21 | | இரும்பு வாளி | 01 |
| 5 | 25622/Misc/21 | | இரும்பு வாளி | 02 |
| 6 | 25683/Misc/21 | | இரும்பு வாளி | 01 |
| 7 | 25683/Misc/21 | | சவள் | 01 |
| 8 | 25624/Misc/21 | | இரும்பு வாளி | 01 |
| 9 | 25624/Misc/21 | | சவள் | 01 |
| 10 | 26016/PHI/21 | | அலுமீனிய கேக் தட்டம் | 02 |
| 11 | 26017/PHI/21 | | அலுமீனிய கேக் தட்டம் | 03 |
| 12 | 26018/PHI/21 | | அலுமீனிய கேக் தட்டம் | 03 |
| 13 | 25778/PHI/21 | | அலுமீனிய கேக் தட்டம் | 05 |
| 14 | 24299/E/20 | | அலுமீனிய சட்டி | 01 |
| 15 | 20852/PC/18 | | மண்வெட்டி | 01 |
| 16 | 20852/PC/18 | | சுத்தியல் | 01 |
| 17 | 20852/PC/18 | | குறடு | 01 |
| 18 | No Number | | இரும்பு கேக் தட்டம் | 06 |
| 19 | No Number | | அலுமீனிய சட்டி | 01 |
| 20 | | | ஆற்று மணல் | 16 Cube |

7- 363

## ஆய விற்பனையும் குத்தகையும்

### திருகோணமலை மாவட்ட கள்ளுத்தவறணை குத்தகைக்கான விற்பனை - 2021/2022

(2021, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் 2022, யூன் 30 ஆந் திகதி வரை )

1.2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2022 யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு சில்லறையாக விற்பதற்கான, 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகையினை விற்பனை செய்வதற்கான நடைமுறைகளுக்கேற்ப, கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து விலைகோரல் படிவங்களும், திருகோணமலை பிரதேச செயலாளர் பணிமனையிலிருந்து பெற்று அவற்றைப் பூர்த்தி செய்வதுடன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக் கோரல் வைப்புப் பணத்தினை வைப்புச் செய்தமையை உறுதிப்படுத்தும் முகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும், குறிப்பிட்ட விலை கோரலில் குறிப் பிடப்பட்டுள்ள விலை நிர்ணயத்திற்கு ஆகக் குறைந்தளவான 15% ஆன பெறுமதிச் சான்றிதழும் அதனோடு இணைத்தல் வேண்டும்.

3. உரியவாறு தயாரிக்கப்பட்ட அனைத்து விலைகோரல் பத்திரங்களும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடிதவுறையில் இடப்படல் வேண்டும். அக் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "................................ இலக்கமுடைய ............................ கள்ளுத்தவறணைக் கான விலைக்கோரல்" எனக் குறிப்பிடப்படுவதுடன், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவறணையின் பெயர், இலக்கம் ஆகிய வற்றையும் குறிப்பிட்டு 2021.07.19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது அந் நேரத்திற்கு முன் பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளரின் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தரது அலுவலக அறையில் வைக்கப்பட்டிருக்கும் விலைகோரல் பெட்டியில் இடுதல் வேண்டும்.

4. விலை கோரலானது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி யில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைக் குத்தகைக்கான விற்பனை நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

5. 2021.07.19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடனேயே விலை கோரல் பத்திரங்கள் திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில் அனைத்து கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தரகர்கள் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பணிமனைக்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. முன்வைக்கப்பட்ட விலை கோரல் படிவங்களுள் தெரிவு செய்யப்பட்ட திருப்திகரமான ஒப்பந்தக்காரரால் 02 மாதங்களுக்கு மேற்பட்ட வைப்புப் பணமும் ஒரு மாதத்திற்கான அனுமதிப்பத்திர கட்டணமும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த தினத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்.

7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளுள் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ 2021.07.19 ஆந் திகதி விற்பனை செய்ய முடியாதிருப்பின் மீண்டும் விற்பனை செய்வதற்காக 2021.07.22 ஆந் திகதி மு.ப.10.00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் பாரமேற்று முடிந்தவுடனேயே கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இதற்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் உரித்தாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

8. இது தொடர்பாக மேலதிக விபரங்களை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

பொ. தனேஸ்வரன்,
பிரதேச செயலாளர்,
பட்டினமும் சூழலும்,
திருகோணமலை.

பிரதேச செயலகம்,
திருகோணமலை பட்டினமும் சூழலும் ,
2021.07.03.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | வலயப் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கும் நேரம் | கள்ளுத் தவறணை மூடும் நேரம் | மீளளிக்கப்படும் விலைகோரல் வைப்புப் பணம் | மீளளிப்புச் செய்யப் படாத விலை கோரல் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வட்டார இல. - 1 | வில்லூன்றி இல.-01 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 3,000.00 | ரூபா 1,000.00 |
| 2. | தெக்கலூத்து | தெக்கலூத்து இல.-03 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 1,500.00 | ரூபா 1,000.00 |

7- 319

### திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகைக்கான விற்பனை - 2021/2022

(2021, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் 2022, யூன் 30 ஆந் திகதி வரை )

2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2022, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு சில்லறையாக விற்பதற்கான, 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகையினை விற்பனை செய்வதற்கான நடைமுறைகளுக்கேற்ப, கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து விலைகோரல் படிவங்களும், குச்சவெளி பிரதேச செயலகத்திலிருந்து பெற்று அவற்றைப் பூர்த்தி செய்வதுடன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக் கோரல் வைப்புப் பணத்தினை வைப்புச் செய்தமையை உறுதிப்படுத்தும் முகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும், குறிப்பிட்ட விலை கோரலில் குறிப்பிட்டுள்ள விலை நிர்ணயத்திற்கு ஆகக்குறைந் தளவான 15% ஆன பெறுமதிச் சான்றிதழும் அதனோடு இணைத்தல் வேண்டும்.

3. உரியவாறு தயாரிக்கப்பட்ட அனைத்து விலைகோரல் பத்திரங்களும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடிதவுறையில் இடப்படல் வேண்டும். அக் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "................................ இலக்கமுடைய . நிலாவெளி கள்ளுத்தவறணைக்கான விலைக் கோரல்" எனக் குறிப்பிடப்படுவதுடன், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவறணையின் பெயர், இலக்கம் ஆகியவற்றையும் குறிப்பிட்டு 2021.07.19 ஆந் திகதி பி.ப. 01.00 மணிக்கு குச்சவெளி பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது அந் நேரத்திற்கு முன் குச்சவெளி பிரதேச செயலாளரின் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தரது அலுவலக அறையில் வைக்கப்பட்டிருக்கும் விலைகோரல் பெட்டியில் இடுதல் வேண்டும்.

4. விலை கோரலானது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைக் குத்தகைக்கான விற்பனை நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

5. 2021.07.19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடனேயே விலை கோரல் பத்திரங்கள் திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில் அனைத்து கேள்விதாரர்களும் அல்லது அவர்களின் தரகர்கள் குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. முன்வைக்கப்பட்ட விலை கோரல் படிவங்களுள் தெரிவு செய்யப்பட்ட திருப்திகரமான ஒப்பந்தக்காரரால் 02 மாதங்களுக்கு மேற் பட்ட வைப்புப் பணமும் ஒரு மாதத்திற்கான அனுமதிப்பத்திர கட்டணமும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த தினத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்.

7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளுள் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ 2021.07.19 ஆந் திகதி விற்பனை செய்ய முடியாதிருப்பின் மீண்டும் விற்பனை செய்வதற்காக 2020.07.22 ஆந் திகதி பி.ப. 01.00 மணி வரை கேள்விப் பத்திரங்கள் பாரமேற்று முடிந்தவுடனேயே கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இதற்கான மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் உரித்தாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

8. பொது மக்கள் மற்றும் மாணவர்களின் நலன் கருதி தவறணை தற்போது இருக்கும் இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றப் படலாம்.

9. இது தொடர்பாக மேலதிக விபரங்களை குச்சவெளி பிரதேச செயலாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

டபிள்யூ. எம். பாதிய விஜயந்த,
பிரதேச செயலாளர் (பதிற் கடமை).

பிரதேச செயலகம்,
குச்சவெளி,
2021.07.05.

**அட்டவணை**

| இல. | பிரிவு | வலயப் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கும் நேரம் | கள்ளுத் தவறணை மூடும் நேரம் | மீளளிக்கப்படும் விலைகோரல் வைப்புப் பணம் | மீளளிப்புச் செய்யப் படாத விலை கோரல் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | குச்சவெளி | நிலாவெளி இல. 4 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 3,000.00 | ரூபா 1,000.00 |

7- 328

வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.
www.documents.gov.lk